டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637002.

தமிழ்த்துறை

காப்பியங்கள் : **21PTA07**

தலைப்பு: பெரியபுராணம்

(சண்டேசுரநாயனார் புராணம்)


<u>தயாரிப்பு:</u>

முனைவர் தா.க. அனுராதா,

உதவிப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர் (முதுகலை)

http://www.trinitycollegenkl.edu.in/

# எச்சதத்தன் இயல்பு:

சோழவள நாட்டில் மண்ணியாற்றங்கரையில் அமைந்துள்ள அழகான ஊர் சேய்ஞலூர், இங்குத் தொன்மையான மறையவர் மரபில் காசிப கோத்திரத்தில் எச்சதத்தன் என்ற மறையவன் ஒருவன் இருந்தான். இவன், நவரத் தினத்தையும் நஞ்சையும் ஒருங்கே பெற்று விளங்குகின்ற பாம்பினைப் போல் நல்வினை தீவினை என்ற இரண்டும் ஓர் உருவம் பெற்று விளங்குவதைப் போன்று விளங்குபவன். அவன் மனைவி நற்குடியில் தோன்றியவள், சுற்றத்தாரைத் தழுவி வாழும் இல்லற வாழ்வினை உடையவள், உலகப் பற்றை எல்லாம் நீக்குகின்ற இறைப்பற்று ஒன்றையே பற்றாகக் கொண்டு விளங்குபவள். பவித்திரை என்னும் பெயரை உடையவள். இவர்களுக்கு மகனாகத் தோன்றியவரே விசாரசருமர் என்னும் சண்டேசுநாயனார்.

## நாயனாரின் தோற்றச்சிறப்பு:

வேதநெறி சிறப்புற்று விளங்கவும் மறையவர்களின் குலம் பெருகவும் ஏழு உலகங்களும் உய்யவும் சைவ உண்மைகளின் திறன் வளரவும் மாதவத்தோர் வெற்றி உலகில் சிறந்து விளங்கவும் விசாரசருமனார் தோன்றினார். ஐந்து வயது நிரம்பிய அளவில் ஆறு அங்கங்களோடு கூடிய வேதங்களையும் இறைவனால் அருளப்பட்ட சிவ ஆகமங்களையும் முன்னைய அறிவின் தொடர்ச்சியினால் எளிதில் கற்றுணர்ந்தார். இதனைச் சேக்கிழார்,

‘முந்தை அறிவின் தொடர்ச்சியினால்
முகைக்கு மலரின் வாசம்போல் சிந்தை மலர
உடன் மலரும் செவ்வி உணர்வு சிறந்ததால்’

எனக் குறிப்பிடுகின்றார். மொட்டில் மறைந்துள்ள மணம், மலர் மலரும் காலத்தில் வெளிப்படுதல் போல விசாரசருமரின் சிந்தை மலர அதனுடன் மலர்கின்ற பக்குவமுள்ள உணர்ச்சியினால் எளிதில் வேத ஆகமங்களைக் கற்றுணர்ந்தார்.

## நாயனாரின் மனிதநேயம்:

ஏழாம் வயதில் உபநயனச் சடங்கினை முடித்தனர். நீதிநூல்களால் இகழப்படும் நெறியல்லாதவை நீங்க மற்றவை எல்லாம் விசாரசருமரிடம் சிறந்து விளங்கின. எனினும் பெற்றோர்கள் தங்கள் மரபின் வழக்கப்படி வேதம் ஓதுவிக்கும் செயலைச் செய்தனர்.

ஒரு நாள் வேதம் பயிலும் மாணவர்களுடன் விசாரசருமர் சென்று கொண்டிருந்தார். அப்போது கன்றினை ஈன்ற பசு ஒன்று ஆயனைத் தன் கொம்பால் முட்ட முயன்றது. உடனே ஆயன் தன் கையிலுள்ள கோலினால் பசுவினை அடித்தான். தடுத்து நிறுத்திய விசாரசருமர் ஆனிரைகளை இனி நீ மேய்க்க வேண்டாம். நானே மேய்த்துக் கொள்வேன் எனக்கூறி ஆயனை அனுப்பிவிட்டார்.

உயிரினங்களிலேயே ஆவினம் உயர்ந்தது என ஆகமநூலால் உணர்ந்ததாலும், தேவர், முனிவர், கடவுளர் கூட்டங்கள் ஆவின் உடலில் பொருந்தி இருப்பதாலும், இறைவனுக்கு மஞ்சனமாட்டப் பயன்படும் பஞ்ச கவ்வியங்களைக் கொடுப்பதாலும் சைவத்தின் திருச்சின்னமாக விளங்கும் திருநீறு அதன் சாணத்திலிருந்து கிடைப்பதாலும் சிவபெருமானும் உமையம்மை யாரும் எழுந்தருளும் எருதுவின் இனத்தைச் சார்ந்ததாலும் ஆனிரையிடம் அன்பு கொண்டு விளங்கினார் விசாரசருமர்.

# ஆனிரைகளை மேய்த்தல்:

வேதியர்களின் அனுமதியோடு ஆனிரைகளை மேய்க்கச் சென்றார். புல் மிகுந்த இடங்களில் வேண்டுமளவு மேயச் செய்தும், நீர்த்துறையில் தண்ணீரைப் பருகச் செய்தும், நிழல் தரும் மரங்களின் அடியில் கிடத்தியும் அன்போடு அவற்றைப் பேணிக்காத்துவரலானார். பசுக்களும் முன்பைக் காட்டிலும் அதிகமான பாலைக் கரக்களாயின. மறையவர்களும் உள்ளம் மகிழ்ந்தனர்.

முல்லைப் புறவில் புல்லை மேய்ந்த பசுக்கள் விசாரசருமரின் அருகில் சென்றபோது கன்றினைக் கண்ட தாய்போல் கனைத்து மடி நிறைந்து தாமாகவே அன்பினால் பால்சொரியலாயின. இதைக்கண்ட விசாரசருமர் இறைவனின் திருமஞ்சனத்திற்கு இப்பால் பயன்படும் எனக்கருதினார். மணல்திட்டில் மணலால் சிவலிங்கம் ஸ்தாபித்தார். அத்தி மலரையும் தளிர்களையும், முல்லை நிலத்து மலர்களையும் பறித்துச் சேகரித்தார். பசுக்கள் சொரியும் பாலைக் குடங்களில் நிரப்பி இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்வித்து மலர்களால் அலங்கரித்து வழிபட்டார். மாலைவேளையில் வழக்கம் போல் மறையவர் வீடுகளின் பசுக்களை ஒப்படைத்தார். பசுக்களும் கறந்த பால் குறையாமல் கொடுத்து வந்தன. இதன் உண்மையை உணராத ஒருவன் மறையவர்களிடம் விசாரசருமரின் செயலைக் கூறினான். மறையவர்கள் எச்சதத்தனை அழைத்து விசாரசருமரின் செயலைக் கூறிக் கண்டித்தனர். எச்சதத்தனும் இனி இவ்வாறு நிகழாது என உறுதி கூறிச் சென்றான்.

## எச்சதத்தனின் செயல்:

மறுநாள் விசாரசருமர் ஆனிரைகளை ஓட்டிச்செல்லும் போது அவர் அறியாதவாறு எச்சதத்தன் பின் தொடர்ந்தான். மரத்தின்மேல் ஏறி அமர்ந்து விசாரசருமரின் செயலைப் பார்த்தவாறு இருந்தான். விசாரசருமர் மலர்களைச் சேகரித்து, பசு சொரிந்த பாலைக் குடங்களில் நிரப்பிப் பூசை செய்யலானார். மலர்களை திருமுடியின் மேல் சாத்தி குடங்களில் உள்ள பாலால் திருமஞ்சனம் ஆட்டினார். கோபம் கொண்ட எச்சதத்தன் அருகிலே கிடந்த கோலினால் விசாரசருமரின் முதுகில் அடித்துக் கடும் வார்த்தைகளால் திட்டினான்.

ஆழ்ந்த உள்ளன்போடு பூசனையைச் செய்ததால் விசாரசருமர் இதனை உணரவில்லை. எச்சதத்தன் தன் காலினால் பாற்குடங்களை இடரித் தள்ளினான். பாற்குடங்கள் சிந்தியமையால் உணர்வு வரப்பெற்ற விசாரசருமர் ஒரு நொடியில் பாலை சிந்தியவர் தன் தந்தை என்பதையும் உணராதவராய், குடத்தை இடரிய காலினை தண்டிக்க விரும்பி அருகிலே கிடந்த கோலினை எடுத்தார். அது மழுவாக மாறியது வீசி எறிந்தார். இரண்டு கால்களும் துணிக்கப்பட்ட நிலையில் எச்சதத்தன் தரையில் சாய்ந்தான். பூசைக்கு நேர்ந்த இடையூறினைப் போக்கிய விசாரசருமர் மீண்டும் பூசையில் ஈடுபடலானார்.

# விசாரசருமர் பெற்ற பேறு:

விசாரசருமரின் பெருமையை உலகிற்கு உணர்த்த விரும்பிய இறைவன் உமாதேவியாருடன் விடையின்மேல் ஏறி காட்சிகொடுத்தார். பூதகணங்களும், தேவர்களும் முனிவர்களும் புடைசூழ வந்தனர். பக்தியில் முதிர்ந்த பாலகனான விசாரசருமர் இறைவன் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

'நம்பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய்
அடுத்த தாதை இனி உனக்கு தாம்'

என்று கூறி உச்சிமோந்து மகிழ்ந்தார். சிவபெருமானின் திருமலர்க் கரங்கள் பட்டமையால் விசாரசருமர் இறைவனின் திருவருள் ஒளிபெற்று விளங்கினார். அவரை இறைவன் தம் தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக ஆக்கினார். "நாம் உண்ட பரிகலமும், உடுப்பவையும் சூடுபவையும் உனக்கே உரிமையாகும்படி சண்டீசன் என்னும் பதவியைத் தந்தோம்" என்று அருளிச் செய்தார். அதற்கு அடையாளமாக அவர் திருமுடியில், தமது சடைமுடியில் சூட்டிய கொன்றை மாலையை எடுத்துச் சூட்டி அருளினார்.

தேவர்கள் மலர்மாலை பொழிய, வேதங்கள் துதிக்க. உலகமெல்லாம் ஆரவாரிக்க, கணநாதர்கள் மகிழ்ந்து பாடிஆடி வர, தேவதுந்துபிகள் முழங்க, சைவ நன்னெறி ஓங்க சிவபெருமானை வணங்கியவாறே சண்டீசப் பதவியைச் சென்று சேர்ந்தார்.

சிவ அபராதம் செய்த எச்சதத்தன், சேய்ஞலூர் பிள்ளையான விசாரசருமரின் மழுவினால் எறியப் பட்டதால் அந்தப் பிழையிலிருந்து நீங்கினான். தன் சுற்றத்தாருடன் சிவலோகத்தை சென்று சேரும் பேற்றினைப் பெற்றான்.

நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/